முற்பகல் 11–45

(ஆ) சென்னை, பல்லாவரம் நகராட்சி, குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டுள்ள பல்லாவரம் நகராட்சி, பம்மல் நகராட்சி, அனகாபுத்தூர் நகராட்சி, திருநீர்மலை பேரூராட்சி, பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதிகளில், 10 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் வருகிறது. நிரந்தரமாகக் குடிநீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக கடந்த காலத்தில், 2010 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிக் காலத்தில், பல்லாவரத்திற்கு 99 கோடி ரூபாயும், பம்மலுக்கு 43 கோடி ரூபாயும், அனகாபுத்தூருக்கு 18 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் இப்போது முடியும் தருவாயில் உள்ளன. அதற்கு செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்துதான் குடிநீர் வரவிருக்கிறது. ஆனால், அங்கிருந்து நிரந்தரமாகக் குடிநீர் வராது. காரணம், அங்கிருந்து 6 மாத காலத்திற்குத்தான் குடிநீர் வரும் நிலை இருக்கிறது. ஆகவே, குடிநீர் நிரந்தரமாக வர வேண்டுமென்று சொன்னால், பாலாற்றிலே 1972 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம், மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது 1983 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. 45 ஆண்டுகளுக்கு முன்னால் அந்தக் குடிநீரேற்று நிலையங்கள் தொடங்கப்பட்டு, தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன. குடிநீர் நிரந்தரமாக வர வேண்டுமென்று சொன்னால், அகலமான மெயின் பைப் பதிக்கப்பட வேண்டும். அதற்கு 40 அல்லது 50 கோடி ரூபாய் செலவாகும் என்று குடிநீர் வடிகால் வாரியம் தெரிவிக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கருணாநிதி, உரையை முடியுங்கள்.*

திரு. இ. கருணாநிதி: *ஆகவே, நிரந்தரமாகக் குடிநீர் கிடைக்கப்பெற இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.*

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பல்லாவரம் நகராட்சியின் மக்கள் தொகை 2,15,452 ஆகும். பல்லாவரம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் நாளொன்றுக்கு 40 இலட்சம் லிட்டர் குடிநீரும், சென்னை குடிநீர் வாரியத்தின்மூலம் நாள்தோறும் சராசரியாக 10 இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரங்கள்மூலம் 36 இலட்சம் லிட்டர் குடிநீரும், ஆக மொத்தம் 86 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு, நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் 4 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பல்லாவரம் நகராட்சியின் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த, 99.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3-ன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதியொதுக்கப்பட்டு, குடிநீர்த் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தற்போது 89 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் ஜனவரி 2019-ல் முடிக்கப்பெற்று, நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 100 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அனகாபுத்தூர் நகராட்சியிலும் இதுபோன்ற சூழ்நிலை இருக்கிறது. இங்கே 7 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்படுகிறது. அதனை மேம்படுத்த 14.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நிதியாதாரங்களைக்கொண்டு குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். 30 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள பணிகள் 2019-க்குள் முடிக்கப்பட்டு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 185 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பம்மல் நகராட்சியின் மக்கள்தொகை 75,870 ஆகும். குடிநீர்த் தேவை 6.83 மில்லியன் லிட்டராகும். இதிலும் ஒரு திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்மூலம் 7 நாட்களுக்கு ஒருமுறை, 48 லிட்டர் வீதம் குடிநீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 43.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3–ன்கீழ் திட்டம் தயாரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதிலும் 89 சதவீதப் பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2019–ல் பணிகள் முடிந்துவிடும். அதேபோல், சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 65 இலட்சம் லிட்டர் குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. 128 நகராட்சிகளிலே தண்ணீர் பஞ்சம் இருக்கிறது, அதில் மாற்றுக் கருத்து இல்லை. இருக்கின்ற தண்ணீரை வைத்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்கான நிரந்தரத் தீர்வு குறித்து நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். அவற்றை நம்முடைய துறை அதிகாரிகள் குறித்துக்கொண்டிருக்கிறார்கள். நிரந்தரத் தீர்வு என்பது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது போடப்பட்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்தான். இத்திட்டம் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களிடம், எங்களையெல்லாம் டெல்லிக்கு அழைத்துச் சென்று தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறார்கள். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் 400 M.L.D. பெறப்படும். அது வரும்போது பல்லாவரத்திற்கென 38 மில்லியன் லிட்டர் குடிநீர் ஒதுக்கீடு செய்யப்படும். அது வரும்போதுதான் நிரந்தரத் தீர்வு ஏற்படும்.

முற்பகல் 11–50

மேலும், நீங்கள் சொன்ன கருத்தையும் துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும். இதுவும் ஒரு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்தும். கண்டிப்பாக இத்திட்டம் கூடிய விரைவிலே செயல்படுத்தப்படும். ஏனெனில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, 29–3–2018 அன்று ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையுடனான கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது. ஆகவே, அதையும் வேகமாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.